T03946
R001J01

# ஸ்ரீ ஜகத்குரு பாமாலை



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

T003946
Sarasvati Mahal Library. Thanjavur
3946
39

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஜகத்குரு பாமாலை

2.26039
(1971)

தமிழ்
3946

திருநெல்வேலி ஜில்லா நடுவக்குரிச்சி கிரமம்

**லெக்ஷிமியம்மாளால்**

இயற்றப்பட்டது.

சென்னை ராஜா அண்ணாமலைபுரம்
மஹா மஹோபாத்யாய

**K. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி**

அவர்களால் பார்வையிடப்பட்டது.

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY TANJORE
RECEIVED
JUL 1971

# முகவுரை

உலகில் அரிதான மானிட ஜன்மம் எடுத்தும் பவஸாகரத்தில் மூழ்கி, கரை யேற அறியாமல், தயங்குகின்ற ஜீவகோடி களுக்கு, பரமேஸ்வரன் இறங்கி சங்கர குருமூர்த்தியாய் எழுந்தருளி, தேச சஞ் சாரம் செய்து, அமிர்த வாக்கால், வர்ணு ச்ரமதர்மம் போதித்து, அத்வைதம் ஸ்தா பித்து, சரணமடைந்த, பக்தர்களனைவரை யும், விக்ஞான ஓடத்தில் ஏற்றி, அமிர்தத்வ, மோக்ஷக்கரை சேர்த்து, தன்மயமாக்கி அருளிய, சர்வஜீவதயாபர, சச்சிதானந்த தவசிரேஷ்ட, ஞானக்களஞ்சியமாய், கருணு மூர்த்தியாயும் விளங்கும், ஸ்ரீமத் காம கோடி, பீடாதிபதிகளாகிய, பரமஹம்ஸ, பரிவ்ராஜக, ஆசாரிய சந்த்ரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளாகிய சத்குரு திவ்ய சரண கமலங்களிலே, கோடி, வந்தனம் அளித்து, இதம், ஸர்வம், பேதை, வணக்க மாய் சமர்ப்பிக்கின்றேன்.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, + TANJORE +

# ஸ்ரீ ஜகத்குரு பாமாலை

முதற் பதிப்பு : டிசம்பர் 1957

பதிப்புரிமை பெற்றது.

விலை : அணா 4 or 25 ந. பை.

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

லிபர்ட்டி அச்சகம்,
சென்னை - 1.

ஸ்ரீ:

# ஸ்ரீ ஜகத்குரு பாமாலை

3946

## விருத்தம்

முக்கண்ணன் பாலகனே மூஷிகவாகனனே
ஸத்குரு மகிமைகளை சாற்றிட துணிகின்றேனே
சர்க்கரை மோதகமும் ஸரியாகவே படைப்பேன்
விக்கினம் வராதருளும் வேலவா கார்த்தருளும்.

'ஏமனி புகடுசு' என்ற மெட்டு

பல்லவி

வாணியே என் வாக்கிலே வந்தருள் செய்வாயே (வா)

அனுபல்லவி

வீணை புஸ்தக பாணியே
வேத மாதாவாகிய ஸ்ரீ (வா)

சரணம்

ஸந்ததம் உந்தனை வந்தனம் செய்கின்றேன்
சிந்தை மகிழ்ந்து என்நாவில்
சீக்கிரம் வந்து வசிப்பாயே. (வா)

ராகம்: மோகனம்

'இல்லையென்பான்யாரடா' என்ற மெட்டு

பல்லவி

பார்க்கப் பார்க்கத் திகட்டுமோ
பகவத் பாதாள் பவனிவரும் மகிமை, (பா)

அனுபல்லவி

பார்க்கத் திகட்டுமோ பரமகாருண்ய குரு
பாதசாரியாக பல்லக்கில் வரும் காக்ஷி (பா)

சரணம்

1. பக்தர்கள் யாவரும் பூர்ணகும்பம் எடுக்க
ச்ரத்தையாய் சுமங்கலி முத்தாரத்தி எடுக்க
அத்தனை பேர்களும் அற்புதம் தரிசிக்க
சுத்த பெண் பேதையான் திருப்தியாகஸ்துதிக்க (பா)

2. வாசாம் அகோசர வஸ்துவாகிய ப்ருமம்
தேஜோ மயமாக பட்டண வீதி எங்கும்
ரோஜா ஹாரம் துளசீ ஹாரங்கள் பூண்ட
ஆசார்யாள் தரிசனம் அபலை சொல்லத் தரமோ (பா)

ராகம் : பைரவி தாளம் : ஆதி

'உபசார மூலனு' என்ற மெட்டு

பல்லவி

கனகாபிஷேக கண் காக்ஷியை தரிசிக்க
கோடிக் கண்கள் வேண்டும்

அனுபல்லவி

கனதன ஸ்வர்ண காசுபவன் புஷ்பம்
கருணா ஸாகர குரு சிரஸில் வர்ஷிக்கின்ற

சரணம்

1. பதினெண் வாத்திய வேதங்கள் முழங்க
பக்த கோடிகள் குரு பாதத்தை வணங்க
பதித பாவன பரமாத்மா விளங்க
பரம ஹம்ஸ குரு பரன் அருள் பொங்க (க)

2. நிமல நிராமய நவகங்கா தீர்த்தமும்
அமிர்த சுத்தோதக அபிஷேகங்களும்
கமல சரணக் காக்ஷி கனவில் கண்டு மகிழ்ந்தேன்
அமல குரு அருளால் அபலை யான்புகழ்ந்தேன் (க)

ராகம்: வஸந்தா　　　　தாளம்: ஆதி

பல்லவி

குருபரன் வாக்கியமே, அருளே, மஹா வாக்கியமே
தரம், சுரண், சிரம், பெறல் மஹா பாக்கியமே

அநுபல்லவி

குருச்ருதி வாக்யமே கூடஸ்த்த ப்ருஹ்மைக்யமே
ஸருவச் லாக்கியமே ஸ்மரிப்பதே யோக்கியமே (கு)

சரணம்

அறி வுருவாய் இந்த அவனி எழுந்து
அடியார்க்குகந்து அன்பு மிகுந்து
அறியாமையை நீக்கி ஆனந்த மாக்கிய
ஆசாரியாள் மகிமை அற்புதம் அற்புதமே (கு)

ராகம்: கானடா

பல்லவி

சங்கர குருவே சரணம் மாப்ரபுவே (ச)

அநுபல்லவி

1. மங்கள ரூபமே என்குல தெய்வமே
சங்கை தீர்த்தருள இங்கெழுந்த பாதமே (ச)

2. மாலயன் காணாத மாசில்லா தீதமே
காலடி எழுந்த கருணை பொற்பாதமே (ச)

3. சச்சிதானந்தமே ஸஜ்ஜான ஸ்வதந்தமே
ஸொச்சாமல ஸ்ரீ சந்திர சூடரூபமே (ச)

4. அத்வைதஸ் தாபன் ஆசார்ய ரூபமே
தத்வம்பத ஐக்ய தத்பத லக்ஷியமே (ச)

5. அஞ்ஞான நாசமே ஆத்ம ப்ரகாசமே
ப்ரக்ஞான ப்ரும் ஹமே பரப்ரேமாஸ் பதமே (ச)

6. கேட்டதெல்லாம் அளிக்கும் கற்பக தருவே
வாட்டமெல்லாம் தீர்க்க வந்த ஸத்குருவே (ச)

ராகம் : ஆரபி தாளம் : ஆதி

பாகிபர்த என்ற மெட்டு

பல்லவி

ஆசாரியாளின் அபார மகிமையை சங்கர
அபலை சொல்ல தரமோ (ஆசா)

அனுபல்லவி

தேச ஸஞ்சார திக்கு விஜயமணி
தேசாதிபதியான தேசிக சிந்தாமணி (ஆசா)

சரணம்

1. வேத வேதாந்த மணி விமல அமல மணி
ஓ தரெண்டில்லா ஒப்பற்ற தவமணி
வேதமுடிவான வெட்டவெளியிலே
வீற்றிருக்கின்றமணி விவேக சூடாமணி (ஆசா)

2. மறைவடிவான மணி மௌன ஸ்வரூபமணி
மறுவில்லா மாணிக்க மகத்குரு மணி
கறை இல்லாகல்விமணி கைவல்ய பதமணி
கருணை ஸாகர மணி கைலாஸ வாஸமணி (ஆசா)

ராகம் : கேதாரம் தாளம் : ஆதி

'ஸகல கலா வாணியே' என்ற மெட்டு

பல்லவி

கருணையை என்ன சொல்வேன் சந்த்ரசூட
குரு கருணை என் சொல்வேன் (கருணை)

அனுபல்லவி

தருணம் தன்னிலே திருவுள்ளம் இரங்கியே
அருகினில் எழுந்து அருள் மழை பொழிகின்ற
(கருணை)

சரணம்

1. கலைஞான பண்டித காமகோடி பீடம்
கர்ம ஜென்ம கடல் கடக்க விஞ்ஞான ஓடம்
மலின மில்லா சுத்த மஹாவாக்ய கூடம்
மந்தஹாஸமாய் குரு மொழிவதே சாந்தி பாடம்
(குரு)

2. பரப்ரும்ம ஸ்வரூப பரிபூர்ண பூமான்
பரம காருண்ய பரபக்த காமான்
பரம ஹம்ஸ பரி விராஜக ஸ்ரீமான்
பரம கல்யாண குண ஸ்ரீமத் பகவத் பாதாள் (குரு)

## திருப்புகழ்

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

'இசைந்த சூலமும்' என்ற மெட்டு

1. சரணம் சரணம் சந்த்ரசேகர குருநாதா
கருணா ஸாகர காஷாய கமண்டல குருநாதா

2. பரப்ரும்ம ஸ்ரீ பரம ஹம்ஸ குருநாதா
பரமாத்ம போத பரம காருண்ய குருநாதா

3. மாலயன் காணுத மாசில்லா தீதா குருநாதா
ஆலடி அகன்று காலடி எழுந்த குருநாதா

4. ஆலம் உண்ட திருநீலகண்ட ஸ்ரீ குருநாதா
காலனை உதைத்த கைலாஸவாஸ குருநாதா

5. கலைஞான பண்டித காமகோடி பீட குருநாதா,
மலரடி சரணம் மங்கள சங்கர குருநாதா

6. கோபாலபுரம் விஜயம் செய்த குருநாதா
கூப இருள் நீங்க கோடி சூர்யோதய குருநாதா

7. அமிர்த வாக்கால் அருள் மழை பொழியும் குருநாதா
அமல ஆனந்த அடியார் போற்றும் குருநாதா

8. சின்மயா னந்தசிவ சங்கர ஜெகத் குருநாதா
தன்மயமே தானென்ற தயாபர குருநாதா

9. ஸாம்ப ஸதாசிவ ஸத்குண சங்கர குருநாதா
மாம்பல நகரில் மகிழ்ந்து எழுந்த குருநாதா.

10 [illegible] விஜயம் செய்த குருநாதா
எங்கும் மங்களம் பொங்க அருள் செய்யும் குருநாதா

ராகம்: தன்யாசி

'கனக சபாபதி' என்ற மெட்டு

பல்லவி

குருகுல வாஸமாய் இருப்போர்க்கு
பாரில் மறுபிறவி வருமோ

அனுபல்லவி

அருளே திரண்டொரு திருமேனி கொண்டகுரு
அருமை பெருமையாக கருணை பொழிகின்ற ஸ்ரீ (குரு)

சரணம்

1. மங்களமாய் விளங்கும் சங்கர குரு பாதம்
எங்கும் ஏக ரஸமாய் பொங்கிப் பொழியும் பாதம்
பங்கமற்ற பக்தருள் தங்கும் சந்தர சேகரான்
பங்கஜ பாதங்களில் பணிந்து ஸதாகாலமும் (குரு)

2. பண்டு மாலயன் காணு பரஸுகா தீத பாதம்
அண்டினோர் பவம் நீக்கும் அமல ஆனந்த பாதம்
எண் டிசையும் புகழும் ஏகரஸ பாதம்
கண்டு ஆனந்தங் கொண்டு அண்டையில்
தொண்டு செய்து (குரு)

ராகம்: சுத்த பங்காள தாளம்: ஆதி

'தோலினே சேசினே' என்ற மெட்டு

பல்லவி

கருணு ஸாகர காமேச்வர காமகோடி பீடாதிபதி ஸ்ரீ
கருணு ஸாகர காமேச்வர காமகோடி பீடாதிபதி ஸ்ரீ

அனுபல்லவி

அருணன் போன்ற அகண்ட ஜோதியே
தரணியில் எழுந்த தன்ய பூபதியே (கருணு)

சரணம்

1. சமதம சாந்த ஸத்குரு மூர்த்தே
ஸம்ஸ்கிருத வித்யா விசால கீர்த்தே
ஸமரஸா நந்த சித்ஸுக பூர்த்தே
சம்புவாகிய ஸ்ரீ ஜகத்குரு மூர்த்தே (கரு)

2. ஜகதீஸ்வர சின்முத்ர தாரா
ஸகல ஆகம ஸாரா கம்பீரா
ஸுக ஸாகர ஸுகுண தீரா
ஸகஜா நந்தா ஸ்ரீ சந்திர சேகரா (கருணு)

## கிளிக்கண்ணி

தூண்டிற் புழுவினைப்போல் என்ற மெட்டு

1. பார்க்கத் திகட்டுமோடி
பகவத் பாதாள் சேர்வையடி
யார்க்குமே கிட்டுமோடி—ஸகியே
ஆத்ம ப்ரும்ம ஐக்யமடி (பா)

2. இயற்கை போதமடி
எங்கும் நிறைந்த பாதமடி
ஏழை சொல்லப் போமோடி - ஸகியே
ஏகாந்த சேர்வையடி (பார்)

3. ப்ரதோஷ பூஜாகாலம் சிரசில்
பத்ம ருத்ராக்ஷக் கிரீடம்
பரமசிவ வடிவை பார்க்கக்கண்
பதினாயிரம் போதுமோ (பார்)

4. சந்திர மௌளீஸ்வர த்ரிபுர
ஸுந்தரி ஜொலிப்பதும்
சந்திரசேகரேந்திர ஸத்குரு
ஸ்வாமிகள் பூஜிப்பதும் (பார்)

5. ராஜாக்கள் பூஜிக்கத் தகுந்த
ஆசார்ய ஸ்வாமிகள்
வாஜாப் பையர் க்ரகத்தில்
எழுந்து உல்லாஸமாய் வஸிப்பதும் (பார்)

6. காலையிலே கஜ பூஜையும்
கோபூஜா மகிமையும்
மாலையிலே ஆதி சங்கர
மகத்குரு பூஜையும் (பார்)

7. வாசாம் அகோசர ப்ரம்மம்
தேஜோ ரூபமாயும்
ரோஜா ஹாரம் அணிந்த நம்
ஆசார்யாள் தரிசனம் (பார்)

## வேதாந்த மிட்டாய்

நோட்டு மெட்டு

1. மிட்டாய் விற்குதடி மகத்குரு ஸன்னிதியில்
மட்டில்லாத மஹிமை பெற்ற
மஹா வாக்யாமிர்த மிட்டாய்

2. தட்டுத் தடையில்லாமலே நாம்
திட்டமாய் வாங்கிப் புஜித்திடுவோம்
மட்டி அவித்தை யுட்பட்டுழன் றிட்ட

3. கஷ்டத்தை விட்டு ஸுகித்திடுவோம்
ஸத்வகுண பழரஸத்தாலும் பக்தி என்கின்ற பாலாவும்
ச்ரத்தையாகின்ற ஜீனியும் சேர்த்து
முக்தியாய்த் திரண்டு உருண்ட மிட்டாய்

4. தின்னத் திகட்டாத மிட்டாய் தித்திப்புக்கீடில்லாத மிட்டாய்
நன்ருக ருசிக்கின்ற நாவில்
ப்ருஹ்மரஸம் உறும் மிட்டாய்

5. காசு பணம் வேண்டாத மிட்டாய்
ஆசாபாசம் அண்டாத மிட்டாய்
மாசில்லா ஸ்வப்ர காச சித்வி
லாச உல்லாஸ உபதேச மிட்டாய்

6. ஜாதிபேதம் அற்ற மிட்டாய்
ஸமரஸமாய் விளங்கும் மிட்டாய்
கோதில்லா அமல ஸ்ரீ சந்தர சூடாள்
ஓதியபோத ஸ்வரூப மிட்டாய்

ராகம் : காம்போதி

"கோபால கிருஷ்ணனுயாலரா" என்ற மெட்டு

பல்லவி

ஜோதி ஸ்வரூபமே நாமடி ஜோதிஸ்வரூபமே நாமடி

அனுபல்லவி

ஆதி அந்தமில்லா நிதமடி நேதி நேதி ஞான போதமடி
ஜாதிபேதமில் ஸமரஸமடி கோதில்லா குருநாதன்
மொழியடி (ஜோதி)

சரணம்

1. வஞ்சக அவித்தையாலாகிய கிஞ்சிக்ஞ ஜீவபாவ
மாறிய
ஸஞ்சிதாகாம்ய ஸமூகமும் நீறிய பஞ்சகோசாதீத
மாகிய (ஜோதி)

2. அக்ஞான இருள் அகன்றதாகிய
அவஸ்தை மூன்றுக்கும் அப்பால் மேவிய
ப்ரக்ஞான ப்ரகாசமாகிய
ப்ருஹ்ம ஸாக்ஷாத்காரமாகிய (ஜோதி)

3. ஆனந்தாம்ருதக் கடலிலாடுவோம்
அகண்ட வெளியிலே அன்பாய் கூடுவோம்
ஆனந்தாச் சார்யர் புகழைப் பாடுவோம்.
அகம் ப்ருஹ்மமென்று கூத்தாடுவோம். (ஜோதி)

11 சங்கீத சிவ சங்கரா

உ

ஸ்ரீ குருப்யோ நம:

1. ஸச்சிதானந்த சாக்ஷாத் ப்ருஹ்ம
சொரூப சிந்தாமணியே!
சிச்சுகோதய கடலாகிய
சித்ரூப சிந்தா மணியே
ஸொச்ச ஆனந்த சந்திரசேகர
சங்கர சிந்தாமணியே
ஸஜ்ஜெனுரு க்கருள்செய்திட
வந்த ஸத்குரு சிந்தாமணியே

முக்குணரகித சுத்தாத்ம
நிர்க்குண சிந்தாமணியே
நற்கருணை வாரிதியாகிய
ஸத்குண சிந்தாமணியே
எக்குணங்களும் பற்றுத நித
முக்கண்ண சிந்தாமணியே
பக்குவர்க்கு தக்கருள் செய்கின்ற
ஸத்குரு சிந்தாமணியே

3. நித்திய சுத்த புத்த முத்த
ஸத்திய சிந்தாமணியே
சித்தத்தில் வஸித்தருளுகின்ற
சிர்ப்பர சிந்தாமணியே
அத்துவைத தத்வம் அமிர்த
வாக்கால் அறைகின்ற சிந்தாமணியே
அத்தனை அடியார்க்கருள் செய்யும்
ஆசார்ய சிந்தாமணியே

4. வானவர்களும் காணாத பர
வஸ்த்துவே சிந்தாமணியே
மானிட வடிவாக எழுந்த
மெய்ஞ்ஞான சிந்தாமணியே
ஆனந்தாமிர்த கடலில் ஆழ்ந்த
ஸ்வாத்ம சிந்தாமணியே
தீனருக்கருள் செய்ய எழுந்த
தேசிக சிந்தாமணியே

5. சின்மயமாக விளங்குகின்ற
ஸ்ரீ குரோ சிந்தாமணியே
கர்ம ஜென்ம கடலை கடத்தும்
கப்பல் சிந்தாமணியே
என் மனம் குடிகொண்ட அமல
ஏகாந்த சிந்தாமணியே
தன்மயம் ஆக்கிய தயாபர
தன்னிய சிந்தாமணியே

6. மாலயன் தேடி காணாததீத
மலரே, சிந்தாமணியே
காலடியிலே அவதரித்த
காருண்ய சிந்தாமணியே
சீலகுண சிவகுரு ஆர்யாம்பாள்
செல்வ சிந்தாமணியே
பால ரூபமாய் லீலைபுரிந்த
ப்ரபோத சிந்தாமணியே

7. வாசாம் அகோசரமாக
விளங்கும் சிந்தாமணியே
மாசில்லா ஸொப்ரகாச
ஆசார்ய மாணிக்க சிந்தாமணியே

தேச ஸஞ்சார தேவாதி தேவ
தேஜோன்மய சிந்தாமணியே
நேசமாகவே தாஸர்க்கருளும்
தேசிக சிந்தாமணியே

8. காமகோடி பீடம் வாழுகின்ற
கர்த்தனும் சிந்தாமணியே
நேமமாகவே பூஜை செய்கின்ற
நிர்ம்மல சிந்தாமணியே
பாமரரையும் பரிசுத்த பண்
பாலன சிந்தாமணியே
ஸ்ரீ மானுகிய சங்கர
ஜகத்குரு சிந்தாமணியே

## ஜகத்குருபஞ்சகம்

1. ஸாம கான ப்ரியஜய சங்கர ஜகத்குரோ
காம தகன கருணை சங்கர ஜகத் குரோ
ஸோம சுந்தரேசா ஜய சங்கர ஜகத் குரோ
க்ஷேமம் அளிக்கின்ற ஜய சங்கர ஜகத் குரோ

2. ஆலம் அமுதாக உண்ட சங்கர ஜகத் குரோ
நீலகண்ட நிர்தன ஸ்ரீ சங்கர ஜகத் குரோ
காலடி எழுந்த ஜய சங்கர ஜகத் குரோ
கோலா கால பால லீல சங்கர ஜகத் குரோ

3. பேச சொல்லில்லாத போத பூரண ஜகத் குரோ
ஈசனே ஆசானுகிய சங்கர ஜகத் குரோ
கோச குண்டத்தை இடித்து தகர்க்கு ஜகத் குரோ
ஆசங்கைதந்தாள்கின்ற மல சங்கர ஜகத் குரோ

4. ப்ரப்ருஹ்மஸ்வரூப ஜயசங்கர ஜகத் குரோ
பரம பக்தப்பிரிய ஜய—சங்கர ஜகத் குரோ
பரம ஹம்ஸ ப்ரிவராஜக சங்கர ஜகத் குரோ
பரம காருணீய ஜய சங்கர ஜகத் குரோ

5. மஹா தேவ ஸாம்பசிவ சங்கர ஜகத் குரோ
மஹா மோஹ நிவர்த்தக சங்கர ஜகத் குரோ
மஹா வாக்யோ பதேசக சங்கர ஜகத் குரோ
மஹானுபாவ மங்கள சங்கர ஜகத் குரோ.

## மங்களம்

1. ஆதிசங்கரருக்கு அத்வைத ஸ்தாபனர்க்கு
ஜோதி ஸ்வரூபருக்கு ஸ்வயம்ப்ரகாசருக்கு
மேதினியிலெழுந்த மெய்ஞான பண்டிதர்க்கு
கோதில்லாத குணாதீத குருமூர்த்திக்கு
ஸந்ததம் மங்களம்

2. ஸந்ததானந்தாமல ஸ்ரீசந்த்ர சூடாளுக்கு
மந்தஹாஸமுகார விந்தஸ்வரூபருக்கு
சிந்தனாதீதருக்கு சின்மயானந்தருக்கு
சந்த்ரமௌளீச்வர த்ரிபுரஸுந்தரிக்கு
ஸந்ததம் மங்களம் மங்களம்.

சுபம்

The Liberty Press, Madras.

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +



The Liberty Press, Madras-1